MCOP.No. 62/2022

Date : 21.11.2025

Witness Name & Rank – மாரிமுத்து – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

1. விபத்து எப்போது நடந்தது என்றால் 07.02.2022ம் தேதி நடந்தது. விபத்தில் எங்கு நடந்தது என்றால் தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது. விபத்தில் இறந்து போன நபர் யார் என்றால் எனது மனைவி ஆவார். எனக்கு வாகனத்தை ஓட்ட உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை எனது கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற வாகனம் என்ன வாகனம் என்றால் பேஷன் ப்ரோ வாகனமாகும். நான் தான் எனது வாகனத்தில் அதிக வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை வரவழைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல.
2. இரண்டாவது எதிர்மனுதாரருக்கு உரிய காப்பீடு இருந்ததால் மேற்படி எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வாகனத்திற்கு ஆய்வு அறிக்கையின்படி உரிய தகுதி சான்று இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்திற்கு உரிய தகுதியில்லாததால் அதன் காரணமாக தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை அவ்வாறு தாக்கல் செய்தால் விபத்து எனது கவனக்குறைவால் நடந்தது தெரிந்துவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவியும் நானும் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(SD/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.